பிசுமில்லாகிற்றகுமாநிற்றகீம்

# முசீபத்துவிலக்கல் முனாஜாத்து.

இஃது

கோட்டுத்துரைப் பதியில்வாழும்

**முகம்மது பதுர்தீன் சாய்பவர்கள்**

குமாரராகிய

## அகம்மது மகுதிமவுலானா

அவர்களாலியற்றியதை

தேவகோட்டை

**சிலெ. காதர்மீருராவுத்தரவர்கள்**

பொருளுதவியின்பேரில்

கோட்டுத்துரைப்பட்டி

அகம்மதுமகுதிமவுலானா அவர்கள் பேரன்

**மு. முகம்மது அப்துல்லா சாய்பவர்களால்**

தேவகோட்டை

**எஸ்டேட் பிரஸில்**

பதிப்பிக்கப்பெற்றது.

1918-வரு ஹிஜ்ரி-௲௩௱௩௰௬-ம் வரு

ரப[illegible]ன்மீ

[illegible]பதிப்பு. காப்பி-1000.

Q7
N18.
180220.

பிசுமில்லாகிற்றகுமாநிற்றகீம்

# முசீபத்துவிலக்கல் முனாஜாத்து.

இஃது

கோட்டேத்துரைப் பதியில்வாழும்

முகம்மது பகுர்தீன் சாய்பவர்கள்

குமாரராகிய

## அகம்மது மகுதிமவுலானா

அவர்களாலியற்றியதை


தேவகோட்டை

சிலை. காதர்மீருராவுத்தரவர்கள்

பொருளுதவியின்பேரில்

கோட்டுத்துரைப்பட்டி

அகம்மதுமகுதிமவுலானா அவர்கள் பேரன்

மு. முகம்மது அப்துல்லா சாய்பவர்களால்

தேவகோட்டை

எஸ்டேட் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

1918-௵ ஹிஜ்ரி-௲௩௱௩௰௬-ம்௵

ரபிலான்மீ

3-வது பதிப்பு. காப்பி-1000.

# முகவுரை.

ஆதியாய் ஆள்பவனாய் அண்டபிண்ட சராசரங்கள் முதலிய சருவசீவஜந்துக்களையும் தன்னொளியினால் வகுத்து அமைத்து ஆளும் சருவவல்லமையுள்ள கடவுளாகிய (அல்லாகூசுபுஹானகூவத்தாலா) உடைய சகலறகுமத்தும் கிருபையும் மகாகனமும் பொருந்திய தீனின்பிறகாசமாகிய மகா மேன்மையும் சறுக்கியமும் சிறப்புந்தங்கிய ஆலீமாகிய மதுரைப்பதியில்வாழும் மவுலானா மவுலவி செய்யிதினா ஒஸ்தாதினாமீருஅகமது இபுறுகீம்மீரு அம்சது இபுறுகீம்சாகிபு அவர்களுடைய அன்பும் ஆதறவும் நிறைந்த கிர்த்திமாகவும் சகலமான மூமீன் முசிலீங்களுக்கு முரிய வுடற்பிறப்பாகவும் நன்மைவழிக்கு யிச்சித்து நேர்வழியைதுயர்ந்து நடந்துவரும்படியாகிய அடியான் பாவக்கடலில் முழுகிய குற்றவான் கோட்டுத்துரைப்பதியில் வாழும் மூமீன் முசிலீம் சாலிகுமாகிய நல்லொழுக்கம் சத்தியவசனமும் அல்லாவின் பணிவிடைக்கி அதியமுகபபத்தாகிய முகம்மது பகுர்தீன்சாகிபு அவர்கள் கல்பில் குளிர்ந்த பிள்ளைகனியாகிய (அகமதுமகுதி) என்பவன் அல்லாவைக்கொண்டும றசூலைக்கொண்டும் ஈமான்கொண்டும் ஈமான்கொண்ட சகல யிசுலாமானவர்களுடைய பலாய்கள் முசீபத்துகள் ஆபத்துகள் துன்பங்கள் நீக்கி நல்வழியேதுயர்ந்து நடந்து ஈடேற்றமபெறும்படிக்கு அல்லாகுத்த ஆலாவுடைய நல்லுதவியைக்கொண்டும நபிநாயகம் சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களுடையது ஆபறக்கத்துக்கொண்டும் நற்கருத்துவைத்துப்பாடி இதனடியிற்கண்ட பாடல்களைஒப்புக்கொண்டு ஆதரவுதேடி ஆசையோடும் நல்லயெண்ணங்கொண்டும் படித்தும் கேட்டும் அமலச்செய்துவருகிறசகல இசுலாமானதீனவர்கள் அடங்கலுக்கும் அல்லாகுத்தாலா இருபதியினுடைய சவுக்கியமும் சிலாக்கியமும் தந்துஈடேற்றமாக்கி வைப்பானாகவும் ஆமீன் யாறப்பிலாலமீன்.

முகவுரை முற்றிற்று.

அஊது பில்லாகி மினஷயித்தா னிற்றஜீம்.
பிசுமிலா கிற்றகுமா னிற்ற கீம்.

## முசீபத்து விலக்கல்.

---

மௌனகுருவான கௌதுநாயகம் மகுபூபுசுபுகானிமுகியித்தீன்
அப்துல்காதிறு ஆண்டவர்கள் பேரில்.

# முனாஜாத்து.

---

காப்பு-வெண்பா.

முக்தி லுதித்த முகம்மதுற்ற சூல்போர்
சித்தமிரங்கிக் கருணை செய்யவே—நித்தமுமே
தன்னேர்வளியில்மனநாடக் கிருபைசெய்வாய்
தன்னேரிலானே நீ தான்.

கலித்துறை.

### ஆளடிமைகொள்ளல்.

ஆதிமுகம்மதர் தீனைவளர்த்த அருள்மணியே
சோதிமுகித்தீன் மாமணியே பரிசுத்தமுள்ள
சாதிக்குறைசிக்குலமணியே பகுதாதினில்வாழ்
காதிறுவாமணியே எனையாட்கொளென்கண்மணியே. (க)

### காத்திரட்சித்தல்,

ஏற்கையொடு முவகடாமரைத்தாளிணை யெப்பொழுதுந்
தீர்க்கமுடனென்றன் சென்னியிற் சூட்டித்திகைப்பறவே
பார்க்கத்துதிக்கப் பழவடியாருடன் பற்றுறவே
காக்குவகடனுமக்காமே முகியித்தீன் காரணரே. (உ)

தஞ்சமென்றுங்களிணை மலர்த்தாள்நிதஞ் சார்ந்தவர்க்கு
வஞ்சனைபில்லிகள் சூனியமேவல் மற்றுள்ளபற
கிஞ்சைகளாலுறுந் தீங்கனுகாதெந்த வேளையினும்
அஞ்சலென்றே வந்து காப்பீர் முகியித்தீ னாண்டவரே. (ங)

பேய்கள் பிசாசு பிடாரிமுனியின் பிலத்ததென்றே
வாய்கொடுபுன்மன வஞ்சகர் சொன்மயக்கால் மருண்டே

நோய்கொளும் பேர்களுக்கா தாரமாகவு நோக்கிடுவீர்
சாய்கையில் லானபிபோர் முகியித்தீன் சற்குருவே (ச)

## துட்டப் பசாசு நிவாரணம்.

படிக்குள் நரரைப்பிடித்திடுந் துஷ்டப்பசாசினைப்பல்
லுடைத்துச் சடையை அறுத்துப் பொசிக்கி ஒரேமிதியாய்ச்
சடத்திலுதைத்துக் கழுத்தை முறித்துச் சரிப்பிடிப்பீர்.
திடத்தின் மிருந்த முகியித்தீன் காரண தேசிகரே. (ரு)

## சண்டிப்பசாசு நிவர்ரணம்.

வண்டத்தனஞ்செய்யுஞ் சண்டிப்பசாசினை வல்லுடலைக்
குண்டக்கமண்டக்கமாய்க்கட்டி வாயின்மண் கூறுகொண்டே
தண்டத்திறைற் பொடியாக்கி நொறுக்கிச் சரிப்பிடிப்பீர்
எண்டிக்கும் போற்றி செய்மீறுமுகியித்தி னென்குருவே. (சு)

## மட்டிப்பசாசு நிவாரணம்.

கட்டிற்படாத்துட்ட மடடிப்பசாசினைக் கால்கைவிலங்
கிட்டொட்டிலேபட்ட் சிட்டெனக்கட்டிச் சுட்டேபொசுக்கி
எட்டுத்திசைமுத லீரேழுலோகமுமே நகைக்க
வெட்டிப்பாத்திவிடுவீர் முகியித்தீன் மெய்க்குருவே. (எ)

## ஊத்தப்பசாசு நிவாரணம்.

கட்டாரி சக்கரம் வேல்மழுகுக்குந்தம் கைகொண்டு ஜின்னை
விட்டேவி லுத்தப்பசாசினை வீரிடவெட்டிக்குத்தி
அட்டாள தேசமுங் கோட்டாவிகொண்டலைந் தாவிகுரைந்
தெட்டமாற் பேரம்படி செய்வீர்முகியித்தீ னென்குருவே (அ)

## காட்டுப்பசாசு நிவாரணம்.

மோட்டுத்தனஞ்செய்யுங் காட்டுப்பசாசினை மூர்க்கஞ்செயக்
கேட்டுங் கேளாதது போலிருக்குமற் கிடைபைவைத்தின்
ஞட்டுக்குள்ளாதி முகம்மதர்க்காய் வெட்டி நாசஞ்செய்வீர்
தாட்டிகஞ் சேர்நபி தீனைக்கைதாங்கிய தூபமே (கூ)

## கள்ளப்பசாசு நிவாரணம்.

பரசாங்கடித்துக் குரம்பாடுங்கள்ளப் பசாசினைப்பார்த்த
தூசாடி வஞ்சகநெஞ்சைப்பிளந்தங் குருக்கியுமவாய்
பேசாதுபோம்படிசெய்வீரெங்களும் பெருமைபெற்ற
வாசாமகோசர வாழ்வே முகியித்தீன் மாமணியே. (ம)

## துன்பநிவாரணம்.

தலையும்பிடருரமும் வயிறும்நசல் சாடிநின்றே
வலியும் அடைப்பும் யிருக்தல்நடுக்கலுமாய் மய்க்குற்
றுலகில்கனுப்படுதுன்பங்கடீர்த்தங் குதவிசெய்வீர்
சலுகைப்புலியலிமர்துலர்பேரர் தயாநிதியே. (௰௧)

## சகலபிணி நிவாரணம்.

தீராதவல்பிணியென் றொன்றுண்டோவுங்கடிண்புகழைத்
தாராளமாய்ப்புகழ்ந்தோதும் அவர்கிந்தத் தாரணியில்
காரார்குடைநபிதினுக்குரிய கட்டாணிமுத்தே
பாரானதுக்கும் விண்ணுக்கும்பருதி யொப்பாமணியே. (௰௨)

## இபுலீசு அணுகாமல் பாதுகாத்தல்.

பூவின் முதற்பலயாவும் படைத்தபுதியவன்றள்
ஏவன்மறுத்திடும் பேயினைச்சற்றுமிரக்கமின்றிக்
காவற்படுத்தினநம் தீனவர்பாலணுகாமற்செய்வீர்
நாவின்புகட்சிக்கடங்கா முகியித்தி னாயகமே. (௰௩)

## கடாட்சம் வைத்தல்.

பாரினில்விண்மழைபெய்ந்திட மாந்தர்பரிதங்குப
காரணமேதும்புரிவதுண்டோ சொலுங்கதிரியென்
பேரினிலுங்கள் கடாட்சம்வைத்தாலெந்தப் பேய்களுங்கண்
டோயினுளைமிட்டேகுடிகேடென்டொளித்திடுமே. (௰௪)

## வெற்றிதந்திரட்சித்தல்.

ஆதாரமாயுங்கள் பாதாரவிந்தத்தை அண்டினமென்
றோதாதபேர்களும் ஓதிடிலப்பொழுதே யுவந்து
தீதானவல்பிணிநோய்களை தீர்த்துஜெயந்தருவீர்
மாதாவயிற்றிருந்தே முனியைக்கொன்ற மாமணியே. (௰௫)

## நாட்டப்படி நிறைவேற்றுதல்.

மதிமானும்பாவும் பனிந்தேத்திய மாநபிதீன்
விதியாய்ப்படைத்திட்டவல்லோன் லௌகின்வதியகற்றி
துதிசெய்கம்மாதுரைமாற்றி வணிகஞ்செயச்சொலிப்பின்
பதிமேலவாச்செயுமீருமுகியித்தீன் பார்த்திபரே. (௰௬)

## பஞ்சைப்பசாசு நிவாரணம்.

எச்சிப்புயல்பஞ்சை யேழைப்பயலென் றெளிமைசொல்லி
மச்சவிளிச்சியைத் தீங்குசெய்பேயை வாயைகிழித்து
சிச்சைகள் செய்தடித்தோட்டி விரட்டிஜெயந்தருவீர்
அச்ச மில்லானபிபேரர் முகியித்தீன் ஆண்டவரே. (௧எ)

## உதவிசெய்து காத்துரேட்சிக்குதல்.

செய்யாமலுஞ்செய்யுதவிகள் போலுமிச்சேயிழைக்கிக்
கைகாலிமுத்துடலைத்துணுக்கின்ற கசட்டிருளை
மெய்யானவுங்கடிரு நாமப்பானுனல்விலக்கி
மையாடுங்கண்ணியைக்காப்பீர் முகியித்தீன் மாமணியே. (௧அ)

## இதுவுமது.

தூக்கலிறங்கல் மயக்கம் கொட்டாவியுஞ் சோம்பாலுமாய்
ஆக்கையிலசெய் பிணியாவையு நீக்கி நல்லாதரவாய்
சீக்கிரமுங்கள் பதகதிதந்திந்தச் சேயிழையைக்
காக்கக்கடன் றிருப்பீரே முகியித்தீன் காரணரே. (௧௯)

## சாதமிடல்.

காட்டானைவேங்கை கரடிபுலியரி காதுகளிற்
கேட்டால் முகியித்தீனென்றிடும் பேரைக்கெடிகலங்கிக்
கூட்டாளிபோலகங் கொள்ளாதுவாலைக் குழைத்தடிமேற்
சாட்டாங்கஞ்செய்து போற்றிபணியும் சாதமிதே. (உ0)

## வல்லபமியற்றல்.

காட்டேரிவீரிபடாரியைத் துர்க்கையைக் கட்டிவைத்துச்
சோட்டாலடித்துடல் துண்டுதுண்டாகத் துணித்துமற்ற
மாட்டாதபேய்களைக் காட்டானை வாய்க்கனியாக்வைப்பீர்
தேட்டாளர்தேடும் பொருளே முகியித்தீன்றேசிகரே. (உ௧)

எரிதழல் மாரிவுறுகி யோங்கரியை யேமகண்டி
விரிசிரக்காளியை ரூக்கச்சி பேச்சியை வெட்டிமெத்தக்
குருதிகள் கொப்பளித்தோடிடக்குத்திக் குரைதவிழ்ப்பீர்
பருதியெனவந்த மீரு முகியித்தீன் பார்த்திபரே. (உஉ)

கருப்பன்யிடும்பன் கடம்பன் அனுமானூர் காவலனை
நெருப்பிற் சுடுங்கொள்ளிவாயனை நொண்டியை நேர்ந்தபடி

விருப்புத்தடிகொண்டடித்து நொருக்கியுமெத்திசைக்குந்
தரிப்புநிலைப்பறச்செய்வீர் முகியித்தீன் சற்குவே. (உங)

வல்லாண்மைபேசியு மல்லாடுபேய்களை வாயேகிழித்து
கொல்லாதுகொன்றுடற் புண்ணெனச் சுட்டுக்கொடடம்பரத்தி
நில்லாத்தெங்கெங்கும் நிலையாமலோட்டிப்பின்னேரிழைபாற்
செல்லாமல்தீனரைகாப்பீர் முசியித்தீன் தேசிகரே. (உச)

ஐங்கரனறு முகன்வேர்வை புத்திரனயன்னரமால்
சங்கையில்லாத பேய்கூட்டங்கள் கூடியித்தபரணியில்
மங்கையராடவரைத் தீங்குசெய்திடில் மாற்றிவைப்பீர்
யெங்கணுங்கீர்த்திகொள் மீரூமுகியித்தீன்மாமணியே. (உரு)

## குரப்பசாசு நிவாரணம்.

காத்தைக் கதத்தையெரித்துச் சிரத்தைக்கனத்துநித்தம்
வருத்தப்படுத்தி மயக்குற்றழச்செயுமட்டிலுத்தக்
குரத்திப்பிணத்தைக் கழுத்தைமுரித்துக்குறைதவிட்பீர்
வாத்திலுதித்தமகத்தே முகித்தீன் மாமணியே. (உசு)

## ஆதரவுதேடல்.

பூதமுந்தேவுகள் ஜின்பற்றிந்தீங்கு பொலலாங்குகளோர்
போதினுந்தீனவர் பாலணுகா திந்தப்பூதலத்திற்
காதவழிக்கப்புரமோடிப்போம்க் கடாட்சம் வைத்தே
ஆதரவாகயிருப்பீர் முகியித்தீனாண்டவரே. (உஎ)

## தீங்குவிலக்கல்.

[illegible]ராமுகியித்தீன் உண்மைமுகியிததீன் ஓர்மையுள்ள
மீராமுகித்தீன்மேலோன் முகியித்தீன் வெற்றியுள்ள
பேராமுகியித்தீன் மாறாதசெல்வப் பெருக்க யர்
சீராமுகியித்தீனென்று புகழ்ந்திட தீங்கில்லையே. (உஅ)

இதுமுதலுங்கள் பொற்பாதாரவிந்தத்தை யேத்திநித்தந்
துதிசெய்துநாயனை நாளினும்போற்றித்தொழுபவர்க்குப்
பதமுறவே கடைக்கண்பார்த்துத் தீங்கைப்பரிகரித்துச்
சுதிபெறச்செய்தெமைக் காபபீர்[illegible]கித்தீன் கறபகமே. (உகூ)

## சகலறகுமத்து நிகுமத்து[illegible] பெற்றுக்கோள்ளல்.

அல்லா றகுமத்துடனிறசூல் ஷபா[illegible]அத்துமற்ற
வெல்லாநபிமாரொலிமார் பறக்கத்துமேத்தமுள்ள

நல்லோர்பெரியோர் துவாப்பேறுநித்தமென்றவுகோடே
அல்லாமுகியித்தீனென்பவர்க்கே வந்தடைந்திடுமே. (௫௰)

சருவல்லமையுள்ள கடவுளை நாடி துவாவிரக்கல்

## மட்டுவிருத்தம்.

ஆதியேஅப்துல்காதிற் ஆண்டவர்முகத்தைநாடி
பேதையேனுரைத்தபுன்சொல் முசீபத்துவிலக்கைப்பேணி
ஓதியேயெளியேனோர்தன்ன் முவப்பொடுமீவோர்க்கெல்லாந்
தீதறச்செய்யீமானுஞ்சிறந்திடச்செய்வர்யாமீன். (௫௧)

## உண்மைகூறல்.

### சந்த விருத்தம்.

தேவுபற்றிஜின்களும் பேய்களும்பிடித்தால்
தீன்முகியிதீனெனவோர் திரஞ்சொன்னக்கால்
கோவெனவேயழுதுகுடி கெட்டோங்கொண்டோம்
கூடிவந்ததென்னவிளிக் கூடோங்கூடோம்
பாவிகளுக்கிருப்பிடமே தய்யோவையோ
பற்றுரோந்தீனர் முகம்பரோமென்றே
நாவினால்நின்னையங்களுரைத்தெந்நாளும்
நாடோமென்றோடியுடல் நடுங்குந்தானே. (௧)

குவ்விடத்திற்பேய்க்குலங்கள் கூடிக்கூடிக்
கோதாரியாய்மனுமேற் குதிகொண்டாட்டும்
அவ்விடத்தில்தீனரொருக் கொண்டன்பாக
அப்துல்காதிற்முகியித் தீனென்றக்கால்
நவ் யுழுவைக்குலங்கண் டோடுமாப்போல்
நடுநடுங்கிக் கிருகிருத்துனைய்யப்பாடி
எவ்விடத்திலோடி யொளித்திடுவோந்தியா
பெரியுதேயெனவோட்ட மெடுக்குந்தானே (௨)

## முன்னிலைக்கூறிநன்னெறிகூட்டல் மடக்குத்தாழிசை.

அலகையுமுங்கள் நாமங்கண்டஞ்ச
அல்லாமுகியித்தீன் அடிமையைக்காக்கப்
பலவகைப்பேயும் பஞ்சாய்பறக்கப்
பத்தடிபிரம்பாற் கத்தடிவாங்கத்

தலைமுறை தலைமுறை தொட்டிடுமுறட்டுச்
சண்டிப்பேய்களுஞ் சருகாய்ப்பறக்கக்
குலமெனுங்குறைசிக் கோமானமுகிபித்தின்
குறடவாற்றீட்டு முகியித்தீன்குத்தாபே

---

## இறசூல்ப்பத்து கழிநெடிலடி.

குருவியிருந்தெழுந்த பசுங்கொம்புமானேன்
கோலையிழந்தறிவழிந்த குருடனானேன்
இருதலையின்கொள்ளியிலூ எரும்புமானேன்
யிரைதேடும்பூனையின் வாயெலியுமானேன்
சிறுகுரங்கின்கைப்படும் பூமாலையானேன்
தேக்கிலையினீரது போற்றியங்கிறேனே
ஒருவனகமகிழு முகம்மதுவேயேழைக்
குபயபதமுதவும் யிறசூலுல்றாவே. (க)

கடலினலைதனையடைந்த துரும்புமானே
கடுவருந்திமிகவருந்துங் கயலுமானேன்
மடம்புகுந்துசுணங்கு மயங்குவபோலானேன்
வலைபுகுந்துகலைபிரிந்த மான்போலானேன்
அடலரிகண்டுடல்பதருங் கரியுமானேன்
ஆரிருந்துமெனக்குதவி யாவார்காணேன்
உடலுயிர்தன்னொளிவு முகம்மதுவேயேழைக்
குபயபதமுதவும் யிறசூல்லாவே. (உ)

சூரைமுள்ளிவிட்ட பழந்துணியுமானேன்
சோடிழந்த அன்றில் படுந்துயரமானேன்
மாரிமுகங்காணாத பயிருமானேன்
வாசமிழந்தழகான மலருமானேன்
சீறிவரும்பாம்பதின்வாய்த் தேரையானேன்
செழுமதியில்லாத நட்சேத்திரமுமானேன்
ஒருருவிலான்றன் முகம்மதுவேயேழைக்
குபயபதமுதவும் யிறசூலுல்லாவே. (௩)

சென்னை-600 008. 130270.

காயாதபலமாவுங் கதலியனேன்
கரைகாணுதாழுமாக் கலமுமானேன்.
வாயாலேசிலகலைகள் வழுத்தலானேன்
மறைமுடிவின்பொருளறியும் வணக்கங்காணேன்
தாயானபீர்முரீது தரவுங்காணேன்
தாமரையினீரது போற்றதும்புகிறேனே
ஓயாதயிறைவன் முகம்மதுவே யேழைக்
குபயபதமுதவும் யிறசூலுல்லாவே. (௪)
பெற்றவள்தன்முகங் காணுப்பிள்ளையானேன்
பேய்த்தேரைநம்பியலை பிணையுமானேன்
சற்றனுவுமிரங்காத சண்டியானேன்
சதிகள்மிகச்செய்திடுஞ் சண்டாளனானேன்
கற்றவரைப்புறம் பேசுங்கன்மியானேன்
கனவினுமெஞ்ஞான நிலைகாணனந்தோ
உற்றதுணையான் முகம்மதுவேயேழைக்
குபயபதமுதவும் யிறசூலுல்லாவே. (௫)
பம்பரம்போற்சுழன்றுகெடு மனத்தனானேன்
பறுவுசுன்னத்தறிந்து தொழாப்பாவியானேன்
அம்புகடுவடுவிழியாற் காளதானேன்
ஆனுலும்பாவியென் போலியாருங்காணேன்
தம்பமெனக்குமையலது யெவருங்காணேன்
சகலபிழையும்பொறுத் தாள்தானியோன்றாதே
உம்பர்புகழ்ந்தேத்து முகம்மதுவேயேழைக்
குபயபதமுதவும் யிறசூலுல்லாவே. (௬)
மானிலத்தின்வாழ்வை நம்பும்வம்பனானேன்
மார்க்கநெறிமுறையறியா மடமையானேன்
ஊன்களிந்தவெண்புகர் ஏமலியானேன்
ஓடுகிறநாசம்நடுக் கோழையானேன்
தேனிழந்தயீயலைந்த சிறுமையானேன்
செய்ததெல்லாங்குற்றம் நன்மைதிணையுங்காணேன்
ஊனமில்லாச்சுவன முகம்மதுவேயேழைக்
குபயபதமுதவும் யிறசூலுல்லாவே. (௭)

செப்புதற்கோரொப்புவமை யில்லான்ருமே
செகத்திலிமக்கத்தலத்தி லுதித்தெழுந்ததேவே
கைபொருட்குமெய்ப்பொருளே ஹபீபேகண்ணே
கருத்தெவிண்ணவர்க் கரசேசகன நாட்டை
தப்பறதீனவர்க்கு தவுந்தருமேவரீங்கா
தயாநிதியேகபீ பாசன்றனக்கன்பாக
ஒப்பிமதியழைத்த முகம்மதுவேயேழைக்
குபயபதமுதவும் யிறசூலுல்லாவே. (அ)
கண்டபலபொருளிலுறும் கவலைதீர்த்து
கசடனிபுலீசனுட கலைப்பைமாற்றித்
தொண்டர்தொழுந்துணையிலிஷையத் துணையதாக்கித்
தொண்டாசை மூன்றையும்வே ரறத்துண்டாக்கி
ஏண்டிசையும்புகழுமதீ னமூநூர்வாழ்வே
யிகபரமும் சுகநலம்பெற் றினிதாய்வாழ்வே
உண்டுறங்கிலான்றன் முகம்மதுவேயேழைக்
குபயபதமுதவும் யிறசூலுல்லாவே. (கூ)
எல்லாருமானிடரோ வுமதுதீனில்
இணங்காரேலெரிநரகுக் கிரையென்றோதும்
அல்லாவின்றிருத்தூதே முஸ்தபாவெ
அருமதுவேயுகமுடிவி லடியார்க்குற்ற
பொல்லாததுயரகற்றும் புண்யவாழ்வே
புகட்பேறே யருட்கடலே பொருவில்லாத
உல்லாசமானமுகம்மதுவே யேழைக்
குபயபதமுதவும் யிறசூலுல்லாவே. (0)
முற்றிற்று.

---

## தீங்குவிலக்கல்.

தீங்குவிலக்கித் தெரிந்துணர் பவர்க்கே
ஓங்கும்பெரியவ னுதவியுண்டாமே.

## ஆனந்தக்களிப்புச் சிந்து.

பல்லவி.

அல்லா வல்லாகூ வல்லாகூ வென்

நல்லுபகமிலல்லவரும் சொல்லுங்களாமீன்
சொல்லுங்கள்மூமீன் அல்லாகூ வல்லாகூ வல்லாஃ

அநுபல்லவி.

கல்லாதமாந்தருடன்கூடி ஆதி கர்த்தனையையறியாமற்
றப்பிதங்கள்தேடிப் பொல்லாததீகாகுள்ளோடி வீணே
யோகமவீமர்னி லாமவரேமூமீன. (அல்லாகூ)

படைத்ததொல்லா மனுவுக்காகப்படைத்தான் அந்தப்
பாக்கியனேயோக்கியனே நோக்குகலிமாவைப்
படித்ததனின் பயனறிந்துதொழுகாத தீனப்
பிறையர்களே முடிவிற்கொடுநரகிற்புகப்படுத்தி
அடித்தரவு கடிக்கவுடற்றுடிக்கக் கொடுக்கால்
அடிக்கடிவந்திடுக்கியேநட் டுேவக்காலிகடிக்க
படுத்தும் அதாபுகளே யெடுத்துரைக்க யாவும்
படைத்தவனேத்தவிரமொழிபகருவரிங்கிலேயே. (அல்லாகூ)

தொழுதுவாவென வொருவர்சொன்ன லவரைச்
சொல்லாத வார்த்தைகளே வாய்கொள்ளமற்சொல்லி
கழுதைநாய் பன்றியெனக்கூறி வீணே
காலத்தைப்போக்கித்தொழு காதவர்கள்பதறி
அழுதுமிரிவேங்கித்துடி துடிக்க மலக்கல்
மவுத்தவரும் அடுத்துக்களுத் தொடித்துயிரைப்பறிக்கும்
பொழுதவர்கள் படுந்துயரையுரைக்கா தீனப்
புரப்பவனேத்தவிரமொழி புகலுவரிங்கிலேயே. அல்லாகூ (உ)

அஞ்சொகுத்துந் தொழுகாதபேரை காவி
யாவென்னும் நரகத்தி லாக்குமிறையோனே
வஞ்சகம்பொய் பேசிமதம்பேசி வட்டி
வாசிமுதல்வாங்குமறை நீதிமிலாத்தோசி
தஞ்சமெனச் சார்ந்தவரைக்கெடுத்துத் தேக
சௌக்கியமாய் வாழ்ந்திருக்குஞ் சண்டிகளேப்பிடித்து
நெஞ்சில்நெருப்பாணிகளடித்துச் சற்று
நேரமும்விடாமலே யதாபுகள்செய்வானே. அல்லாகூ (ந)

வார்த்தைவிசுவாசியெனப்பேசி கொடி
வஞ்சகத்தை நெஞ்சகத்தில் வைத்திருக்குந்தோசி.

ஷத்தைக்குணமுள்முனபிக்குகளைக்கட்டி அங்கே
யுருட்டிநரகிருட்டில்மலக் கிழுத்துவிழுத்தாட்டி
யேத்தடி நெருப்புத்தடி நீட்டிக் கைகால்
யெனப்பாராதடித்து முரித்தொடித்துலிசானிழுத்துக்
கூர்த்தரவுகடித்து ஊடித்துதர வார்த்தை
குளரியேநாய்கழுதையென அலரியழுவாரே. அல்லாகூ (ச)
கல்லாலும் புத்துகளைச்சமைத்துக் கோயிற்
கட்டியதில்வைத்து முழுக்காட்டிக் கலன்பூட்டி
மல்லார்ந்தபூவுகளைச்சூட்டி வெட்டு
மாங்களெனமண்ணில்விழுந் தெழுந்துவரக்கேட்டு
அல்லாவைமறந்துபணிந்தேற்றும் காபி
ரானவரைதீனர்பகைத் தஞ்சுந்தொழுதிருந்தால்
பொல்லாதநரகிற் புகுதாமல் ஆதி
புறுக்கானிற்சொன்னபடி யிருப்போமேசுவர்க்கம் அல்லா(ரு)
தீயில்விழுந்தேள்க்கிரங்கி யெடுத்தால் சற்றுஞ்
செய்தநன்றிமறந்துகொட்டித் தீவினைசெய்வதுபோல்
காய்நரகிற்புகுங்கொடிய காபிர்க்கறிவை
காட்டிலுரைகேட்டு நடக்காமல்மனங்கருகி
மாயனிபுலீசு கலைப்பதனுல் பெண்டீர்
மக்களெனத்துக்கவலை மாட்டிமதியோட்டிப்
பாயும்புலிபோற்சினந்து பழிப்பா னந்த
பாதகன்ரவிட்டுமறையோதிப் பணிவீரே. அல்லாகூ (சூ)
நாறுகின்ற நரகலிலுங்கேடா யிருக்கும்
நசுறானிக் காபிர்களோடுறவாகிநடந்தால்
பாருலகிற்பன்றியுடன்கன்று மேய்ந்த
பாவினைபோற்றீவினைகள் பரிந்துபிடித்திழுத்து
சீறுகின்றதேளரவுமிருந்த கொடிய
தீநரகிற்புகுத்திவிடுந் தீனர்களைசெப்பார்
கூறுமறைநெறிமுறைபோல் நடந்தால் நன்மை
குறையாமலெந்நாளும் பெறுவோமே சுவர்க்கம் அல்லாகூ(எ)
பால்கொண்டுகழுகுங் கரிநிறம்போம் பசிய
பால்நிறம்போலாமோ கெட்டபகையனிபுலீசன்

மால்கொண்டுமெதிமறந்தகாபிர் காதில்
வல்லமைசொல்லியேதீன் வழியில்வரவுரைத்தால்
நூல்விண்டமேல்வரைப் பழித்தே மறையி
னுட்பமறியாதபடி தப்பிடநாட்களித்தே
கால்கொண்டதேள் நட்டுவைபூரஞ் செய்யான்
கடுவரவுகுடிகொள் நரகதனில்விழுவாரே. அல்லாகூ (அ)
தாய்தந்தை தங்களைத்திட்டுவரும் மக்கள்
சண்டைக்கித்துடைதட்டிச் சாண்டகள்பேசுவரும்
வாய்கொண்டு வழிக்கழிசொல்பவரு மட்டி
மாண்புருடனிஷ்டமதாய் வாஞ்சைகள்வைப்பவரும்
பேய்கொண்டபேர்களை யாட்டுவரும் ஆதி
பெரியோனுக்கிணைமொழிகள் பேசிபணிகுவரும்
காய்கின்றவெங்நரகிற்புகுந்துகொள்ளிக்
கட்டையெனவெந்துருகித் தட்டழிகுவாரே. அல்லாகூ (கூ)
ஒப்பாரிசொல்லியழுகுவோரும் வாயால்
உதாசினங்கள்பேசி மறைநீதமறியாரும்
தப்பாகப்பாரில்நடப்போரும் கள்ளுஞ்
சாருயங்குடித்துக் கஞ்சாவபின்தின்போரும்
மெய்ப்பான ஆதியைவைவோரும் காசின்
மேலாசைவைத்து விசுவாசமற்ப்போரும்
கைப்பானகாபரிலுங் கேடாய் வெந்து
கருகிமஞ்மறுகியெரி நரகிலழுவாரே. அல்லாகூ (ய)
மாதுமக்களாலேமதிமயங்கி வேத
மார்க்கமுறைதப்பிக்குபிர்வழியில் நடப்பாகி
பாதகமபொய்பழிகொலைகட்காமம் கோளும்
படருநடமுடியிந்தப் படித்னிலேவாழுஞ்
சூதர்களைச்சீர் திசனமெனவே வாயாற்
சொன்னாலும்நினைத்தாலுங் தோசியிலுங்கேடாய்ப்
பூதகணம்போல்சடலமபருத்து நரகிற்
புகுந்தாவுகடிக்கமிகப் புலம்பியழுவாரே. அல்லாகூ (கக)
வட்டிக்குக்கொடுத்து வாங்குவர்கள் பெற்ற
மாதாவையிஷ்டமதாய் மருவிசினச்செய்த

துஷ்டரெனவேதமுறைபடிக்க கேட்டு
தௌபாச்செய்தல்லாவை துதித்துப்புகழாமல்
யிட்டபடியிருக்குதெனத் துணிவாய் முதலை
யிருவருமவாங்குவரு மெரிநரககிற்புகுந்து
சுட்டகொள்ளிகட்டையெனக்கருகி வெந்து
சுருண்டுசுருண்டுலையிட்டுச் சோமபியழுவாரே. அல்லாகூ (௧௨)
ஈமான்கொண்டிசுலாமு மானேம் ஆதி
யேவலையும்விலக்கலையு மினதினதென்றறிவோம்
ஆமானகாரியத்தின்படியே நடக்க
ஆராலேமுடியுநீ ரறியாததலவே
சாமான்யகாலக்கொடுமையினால் மார்க்கந்
தனைப்பேணி நடக்கவென்றால் தருணமிதுவலவே
கோமானும் பொருப்பனெங்கள் பிழையை யென்று
கூறுவர்கள்சார்புகளிற் கூடாமற்கூடி. அல்லாகூ (௧௩)
எத்தனைநா ளிருந்திடினுமண்மேற் காயம்
பிறப்பதொழிந்தழியாமலிருப்பவர்களிலையே
மத்திலுடை தயிரதுபோ லுழன்றிங் குலக
வாழ்க்கையிலே மதிமயங்கிநாட்கடத்துமனுவீர்
அத்தனுரைப்படி மலக்கல்மவுத்தும் வந்திங்
கடுத்துயிரைப்பிடித்தபின்யு அடக்குங்கபுரைக்குள்
பத்தியுடன்வாவொருத்தலையெ அந்தப்
படுகுழியிற்படுத்துமதாபுரைக்கக்கணக்கிலையே. அல்லாகூ (௧௪)
கபுறினுக்குள்முன்கருநக் கீரென் றிருவர்
கடினமுடன்வந்துபுகுந் திடிகள்முழங்கதுபோல்
கபுறகற்றி யுக்கிரமாய்க்கேள்வி கேட்டு
சங்கைகெட அங்கமுந்தீத் தழலுறச்செய்தடிக்க
குபிரிதுதீனிதுவென்றறியாமற் கெட்ட
கோபிமுழுப்பாவிகயனக் குழியுமிகநெருக்க
கபுறடித்த செயலைநினைத்தையோ யிந்தக்
கேடுவருமென்றறியோ மென்றலறுவாரே. அல்லாகூ (௧௫)
வையகமும்வானகமும் அமைத்தாள் ஆதி
வல்லவனையெல்லவரும் வணங்கியனுதினமும்

செய்யும்வான் முறைகடவராமல் மார்க்கம்
தெரிந்தபடிநடந்துகலால் தேடிக்களன்றீர்த்து
கையிலுள்ளமட்டும் ஒளிக்காமல் தாங்கள்
கடத்தேறயிருபதியும் கயிறுசதக்காவும்
தொய்பலுடனீய்ந்து மிகவாழ்ந்து நாயன்
றுணையாகஅழியாத சுவர்க்கம்பெறுவீரே. அல்லாகூ (௫)
அல்லாகூ வல்லாகூ வல்லாகூ வல்லாஃ

---

தர்மமிடு தர்மமிடு தாயே தர்மம்
தலைகாக்குமென் றுலகம் சாற்றவறிவாயே (தர்ம)

வர்மமுடனிருகாமலன்னங் கொண்டு
வாச்சோம்பல் வையாமல் வைதுதிட்டாமல்
பிர்மலபிவருவதறியாமல் உலகில்
வெகுநாளைக்கிருப்போமென் றறத்தைமறவாமல் (தர்ம)

மக்கள்பதினாறிருந்தாலு மிடியால்
வருந்துவதற்கொன்றீயாமல் வாழ்ந்திருந்தாலு
மிக்கமாடாடிருந்தாலும் மெத்தை
மேல்மெத்தைகட்டியதைக் கண்டுமகிழ்ந்தாலும்
சக்கரைகள்பால்பழமுண்டாலு மிகுந்த
சையோகதண்டிகைகள் பல்லக்கிருந்தாலு
பொக்கணமாயுயிர் போகும்போது வது
பொருளேனுங்கூடவரவுபயோகமாமோ. (தர்ம) (௧)

பட்டாடைப்பணிதி பூண்டாலும் தந்தப்
பல்லுக்குமைக்காவி யிட்டுக்கொண்டாலும்
துட்டாரணவீரனென்றெல்லாரும் புகழ்ச்
சுகஞ்செய்துபேணியே வளர்த்தவுடம்பாலும்
விட்டோடிப்போவதேசீவன் செம்பொன்
விநாடிக்குக்கோடிபண மீய்ந்துவழுதாலு
மெட்டாமற்போய்விடுந்தாயே இதை
யிருக்குமென்றெண்ணாமல் அன்னமிடுவாயே. (தர்ம) (௨)

இரப்போரைக்கடிந்துசொல்லாதே காயம்
இன்றைக்கோநாளைக்கோ வென்றைக்கோ தாயே
சுரப்பாங்குபேசிவிரட்டாதே அன்னக்
கொடைக்குமுன்னெக்கொடையு மெதிர்த்துநில்லாதே
விறைப்பாகவெடுத்துமுடாதே வீட்டு
வாசலில்வந்தோரைக் காக்கவைக்காதே
வரப்போகமனதுசலிக்காதே கூட
வருகுமேதுணையாக வுயிர்போகும்போதே. (தர்ம) (௩)

பசித்தோர்கள் முகம்பார்த்திராதே நாளும்
பாவங்கள்கெடும்பான வார்த்தைகள் கூறுதே
நிசத்திலொன்றுங்குறையாதே பொய்யை
நிசமென்றமுன்னோர்கள் வாழ்வையறிமாதே
கசப்பருக்காயைசமைக்காதே யெங்கள்
காலுகள்கடுக்கவுங் காக்கவைக்காதே
விசப்பாகப்பாரினடக்காதே செல்வம்
மென்மேலுமுண்டாகத் தர்மமறக்காதே. (தர்மமிடு) (௪)

சாதத்தில்ஜெல மூத்தினாலும் தாயே
சல்யென்று விழுகாதே தள்ளென்றுசொல்லாதே
காதற்ற ஊசியும்வாராதே இந்தக்
கடைகெட்டலொடலொட்டைப் பாண்டத்தைநம்பாதே
சாதித்தநன்மையைவிடாதே இந்தத்
தாரணியில்நல்லோரைத்தூசித்துக்கொடாதே
ஆதித்தன்போலுந்தன் தர்மம் இந்த
அவனிமுதல்மூவுலகுக்கப்பாலும்போம். (தர்மமிடு) (௫)

---

பிசுமில்லாகிற் றகுமானிற்றகீம்.

## மழைபயித்து.

யாறப்பனு யாறப்பனு யாறப்பனு
யாறப்பிசல்வி அலன்னபிய்யிமுகம்மதி.

## மழைக்கி.

மானிடர்பலசீவசெந்துயிர்வாழ்கமாதவம் வாழ்கவே.
மானிலந்தழைத்தோங்கமாமழைமாரி பெய்திடவேணுமே

ஆதியும்நடுவந்தமின்றி நல்லாதியாயழியாதமெய்ச்
சோதியாய்மகுமூதுமாய்ப் பரிசுத்தமானயாறப்பனே (மானி)

மேன்மைதங்கியமானலந் தரும்வேதநீதரைப்பாரெலாம்
தீன்விளங்கிடத்தான்படைத்தனுதினமுங்காக்கும்யாறைப்பனே ()

ஆதிநீ லவுலாக்கெனப்புகழ்ந் தோதும்வேதருக்காகவே
தீதிலாதமெய்வாழ்வுக் கெங்களைச்சேகரிக்கும்யாறப்பனே (மானி)

முச்சகம்புகழ்ந்தேத்து மெங்கள்முகம்ம தாண்டவர்க்காகவே
அச்சமற்றநல்வாழ்வி லெங்களையாக்கிவைக்கும்யாறப்பனே (மானி)

வீதமற்றவருன்னையன்றிமற்றியாவருமெதிராவரோ
பூதலத்தில் யாங்கள்செய்பிழைபொறுத்துரெட்சியாறப்பனே(மானி)

பஞ்சமென்றிடும்பாவியாற் கொடும்பாதகங்களைசூழாமலே
தஞ்சமென்றுனைநம்பு மெங்களைத்தாபரிக்கும்யாறப்பனே. (மானி)

விஞ்சையர்செயும் பஞ்சபாதகவேதனையணுகாமலே
அஞ்சலஞ்சலென்றெங்கள் துன்பமகற்றியாளும்யாறப்பனே (மானி)

அலகைபற்றிகள்தேவுஜின்களின் அச்சம்வந்தணுகாமலே
பலனுறும்படியெங்களைத் தினம்பாதுகாக்கும்யாறப்பனே (மானி)

எத்தனைபிழையாங்கள்செய்யினும்அத்தைநீபொறுத்தாட்கொளும்
கத்தனேபரிசுத்தனே துய்யஹக்கனேயாறப்பனே (மானி)

கண்ணினுமிருகாதினுற்குமுள் காலகரங்கள் மெய்வாயினால்
யெண்ணெணுப்பிழைசெய்யு மேழைக்கிடேத்தமாக்கும்யாறப்பனே

மண்ணையெண்ணிலும்மழையையெண்ணிலும்வானின்மீன்றுகை
யெண்ணிலும், வண்ணிடாப் பிழைசெய்த பாவிக்குன்னிஷ்ட
மீயும் யாறப்பனே. (மானி)

மதங்குலமறி யாமற்செய்பிழைவல்லவா பொறுத்துன்னருள்
நிதமுறப்பதகதிதந்தெங்களை நேசம்வைக்கும்யாறப்பனே (மானி)

மாதுமக்களென்றாசைவைத் திமோகையால்மயங்காமலே
மாதவத்தின்மேலாசைவைத் துனைவணங்கச்செய்யும்யாறப்பனே ()

சொந்தமாகவுன்சோற்றையுண்டு சுகித்துநித்தந்தொழுதுவீண்
பந்தபாசத்திலுழங்குமேழைக்குள் பாதமீயும்யாறப்பனே (மானி)

அடிமைகள்செய்யும் பிழையடங்கலும் ஆள்பவாபொறுத் தாட்கொளும், கடமையுன்னையல்லாமல்வேறொருஹத்தனுண்டோ யா யாறப்பனு.

உன்னைப்போற்பிழை பொறுத்துரெட்சிக்குமுடையநாயகன் வேறில்லை, என்னைப்போற்பெரும்பாவியெங்கினுமில்லைரெட்சியாறப்பனு.

சகலலோகமும் புகழ்விளங்கிய சருவஜீவதயாபரா
மிகுதிபாவங்கள் செய்தபாவிக்கு மீட்சியீயும்யாறப்பனு (மானி).

காகமானது கோடி கூடிலோர் கல்லின்முன்னெதிர்நிற்குமோ
தாகமாயுனைநாடினுற்பிழை சார்வதெங்கேயாறப்பனு (மானி)

அவயவங்கொடு நிதமும்வீண் துனி யாவிற்பாவஞ்செய்யாமலே
கவனம்வைத்திகபாமுமெங்களைக் காக்கும்வல்லயாறப்பனு. (மானி)

எங்கள்தாய்தந்தைமனைவிமைந்தர்பிர்னியதினிகுவாளெலாம்
சங்கையாயிருபதியிலும்நலஞ் சாரச்செய்யும்யாறப்பனு (மானி)

பாரின்மேலிடும்செந்நெல்கன்னல்கள்பயிர்கள்பச்சைபுற்பூடுகள்
வனர்வனமுதலானபல்லுயிருய்யச் செய்யும் யாறப்பனு. (மானி)

வையமீதினில் வாழுந்தீனர்யீமானுடன் கடத்தேறவே
ஐயமற்றநல்லறிவும் தக்குவா அமலுமீயும் யாறப்பனு. (மானி)

ஏதுநாமுய்வதில்லையென் றுனையேங்கிவாடுமவ்வேளையுன்
ஆதராமகுமுதாற்பிணைசோபந்தீர்க்கும் யாறப்பனு. (மானி)

சீதசந்திரன்பூமிமேல்வரச்செய்து தீனிலைசெய்தலபோல்
மாதமும்மழைமாரிபெய்தறம் வாழ்கநாளும் யாறப்பனு (மானி)

காதமெய்மணம் வீசுநீதருக்காகவே யுலகமெல்லாம்
மாதமும்மழைமாரிபெய்தறம் வாழ்கநாளும் யாறப்பனு (மானி)

பாதகம்பிணிமிடுமை பஞ்சமிப்பதியில் வந்தணுகாமலே
சொந்தமாகவே காத்தருள் புரிதுய்யவா யாறப்பனு. (மானி)

காச்சலென்றிடு நோய்க்கிடங்கொடுக்காம லெங்களைக்காத்தருட்
காச்சிகாணநல் மீச்சிதந்தருள் ஹக்கனுயாறப்பனு. (மானி)

சிறியர்விடுகள்கட்டி மண்ணடிசில்களுண்டு தெவிட்டல்போல்
குறிகுணமறியாதபாவிகள் குற்றந்தீர்க்கும் யாறப்பனு. (மானி)

இந்தவூரினில் வாழுந்தீனர் யிபாதத்துக்குறையாமலே
எந்தநாளினுஞ்செய்யநன்மதியீய்குவாயாறப்பனா. (மானி)

அருமதர் திருமருகரும் அலிஅசனுசைன்றிருபாத்திமா
திகளும்இவருக்கா யுபாவெனுந்தீயை நூக்கும்யாறப்பனா (மானி)

சகலநோய்களும் சகலபீடையும்சார்ந்திடாம லிவ்வூரில்
றகுமத்தானதை நிறப்பமாக்கிவை யாயிலாகி யாறப்பனா. (மானி)

சந்தமாகவேயிந்தநற்புகழ்தாகமாய் மகிழ்ந்தோதுவோர்
சிந்தைபோற்கபுல்ச்செய்துவாழ்ந்திடச்செய்குவாயாறப்பனா(மானி)

ஆதியுன்றிருத்தோழர்மேல்சலவாத்தும் சலாமுமுண்டாகவே
மாதவப்நிதம்வாழ்க வுன்னருள்வாழிவாழி யாறப்பனா. (மானி)

மானிடர்பலசீவசெந்துயிர் வாழ்க மாதவம்வாழ்கவே
மானிலந்தழைத்தோங்கமாமழைமாரிபெய்திடவேணுமே (மானி)

முற்றிற்று.

---

மவுத்தையும் பவுத்தையும் வகுத்த
வல்லவன்றன்னை மறவாதிருநெஞ்சமே
ஒக்குதஞ்சும் வணங்கிக்கோவிறைதஞ்சமே

கவுத்துவஞ்செயுமிந்தக் கள்ளத்துன்யாவாழ்வைக்
கருத்திலிருத்திவீணாய்க் காலங்கடத்திடாமற்
றவத்தோர்கள்செய்கின்ற தவுபாயிஸ்தகுபாருந்
தய்யிபுக்கலிமாவும் சலவாத்துமிருந்தோதி
சறகும் உறகுங்கண்டு சரியாய்நடந்துகொண்டு
சற்குருசொல்லைக்கொண்டு நிற்குநிலையில்நின்று (மவுத்தை)

ஆலம்படைக்குமுன்னால் அரூபசொரூபமில்லா
அகதாயிருந்தசோதி ஆதியருள் தான்பொங்கி
மூலமுகம்மதானமுத்தின்மணியொளிவால்
முத்தொகையுலகங்கள் முதலாயதிலுண்டான
சீலமுளசகலசீவசராசரமுஞ்
சினீனும்சென்னத்தும் சிரப்பாய் விபரிதமாய்

கோலம்பல இனிசாயத்தோடுசுநிகோடி
ஞாலாலந்தன்னிலில்லான் குணமயக்கருக்கும
கோமான்முதறத்துள்ள சிமான்படைப்புக்கெல்லாம்
கடலிகொடுக்கப்பின்னால் சேலம்பாடைக்குமுன்னால்

(மவுத்தையும்)

கருவிலுருவாயன்னை கர்ப்பக்குவளைக்குள்
கனிவாய்ரிஸ்க்களித்து காத்துவெளியிலாக்கி
உரியபுடைப்புக்கெல்லாம் யிரணம்பகுந்ததுபோல்
ஒன்றுங்குறைவில்லாமல் நன்றிபெறக்கொடுத்து
மரியறுத்துண்டவென்பைமரியாயெருப்பினோரும்
மத்தாய்நன்மைப்படைத்துவழி பாடறிவுந்தந்த
அரியபெரியநாயன்கிருபையுடையறப்பு
அணுவும்அவனையன்றி யசைந்திடாதெப்பொருட்கும்

ஆண்டவன்நம்பவங்கள் அனைத்தும்நம்மாண்டவர்க்காய்
அரவேபொறுத்துச்சொர்க்கம் தருவான்குறைவில்லாமல்

(மவுத்தையும்)

பிறந்தநாள்முதலாயுண்டு றங்கியனுபோகித்தாய்
பெருசிறுபாவுமெல்லாம் நினைத்தபடிமுடித்தாய்
யிறந்தபின்படும்பாட்டை மறந்தாயறிந்தோர்சொல்லை
யிகழ்ந்தாய்பகீலக்குணங்க ளெடுத்தாய்நலங்கெடுத்தாய்
துறந்துமாதவஞ்செய்யத் துணிந்தாவினியுன்பாவ
தோசமெல்லாந்துலைந்து யாசீன்நபிபொருட்டால்
உறங்கான்குடிப்பூணில்லான் யிறங்கிடறுமைநாளில்
உன்மேற்கிருபைசெய்து நன்மைப்பதியிற் சேர்ப்பான்

ஓகோயினிநீமோசம் போகாதீ மானின்னேசம்
ஒருக்காலுந்தவாமற் றிருக்காட்சி பெறுவாய்நீ

மவுத்தையும்பவுத்தையும் வகுத்தவல்லவன்றனை
மறவாதிருநெஞ்சமே ஒருக்தநெஞ்சம் வணங்கிசகோ
விறைதஞ்சமேமவுத்தினில் மவுலாதன்னருள்மிஞ்சுமே

## அச்சந் தீருதல்.

ஆலமுழுதும்படைத்திரணமளித்துவளர்க்கும்றகுமானீ அடியார் நாங்கள்செயும்பிழைகளனைத்தும்பொறுத்துன் னருள்பிரீவாய்க், கூலித்தொழில்செய்தகங்குளிரக் கொடியோர்வயிறு வளர்க்கறியாக்கொலைபாதகர்கள் சிலர்கூடிக் கொள்ளையிட்டுத்தான் வருகிறதாய்க், காலமுழுதும் அதுபேச்சாய்க் கண்டோர் கேட்டோர்சொல்லக்கேட்டுக் கவலைபெரிதாயாடவரும் கற்பின்மடவார்சிலர்களுமாயுச், சோலியதுவே பாரக்கான துயர்மகலச்சோரருள்ளம்துணுக்குற்றிவட மனுகாமற்றுடைத்தாள்படைத்தாள்துய்யவனே. (க)

கண்ணால்விளக்கின்சுடர் நோக்கிக் களித்துமுடுகிவிழுந்துசடங்கருகிமடியும் பதங்கமெனக் காவாய்ச் சிலபேர்களவுசெய்து,புண்ணியரவமுளநரகிற் புகுந்தங்கெரிவோர் புசிக்குநஞ்சைப் புசித்தாற்பிழைப்பேமெனவரியாப் புல்லோரணுவு மிதைநினை வில்எண்ணுதியாங்கள்குடியிருக்கு மிடத்தில்வரத்தான் ஞாயமுண்டோ யேழைக்குடிகளியாமலவோ யிறைவாபத்துவாச செய்வமல்லோர், உண்ணுதுறங்காயெங்களைக்காத்தொன்னர்பயந்தீர்த்தஞ்சொகுத்தும் உனையாம் வணங்கிக்கேட்குந்துவா வுடனேகபுலாக்கிறையவனே. (உ)

வேறு.

தனக்குறுங்கெடுதிதோன்றுச் சருவபோக்கிலிகளெங்கள்
மனைக்கணில்வரம்நெஞ்சுற்றால் வழிதெரியாமல்நோக்கை
நினைக்குமுன் மாற்றிநீட்டும் நினைவையுமோட்டியாங்கள்
துனிப்படர்திருக்கநாளுந் துணைச்செய்வாய்துணையிலானே.

## சிபாரிசுகோருதல்.

வேறு.

துஆ.

வாமுறுர்தீனோர்நாங்கள் வாழுமாநகரமேவி
பறையர்கள்பள்ளர்பொல்லாப் புவமுறுந்திருடர்கூடி
வொருகெடுதிகளுஞ்செய்யா துண்மையாயெம்மைக்காப்பீர்
துரையில்முன்தீனைக்கையாற் றுங்கியமுகியித்தீனே.

ஆமீனார்மகன் அருமதுநயினார்
மூமீன்யூசுபை முழுதுங்காத்திட

180220
சென்னை-600 008



ஈமானுள்ளவ ரெவருந்துவாச்செய்ய
ஆமீனுமீன் யாறப்பல் ஆலமீன்.

ஐந்தருவனையசெங்கை யப்துல்லாமகவாய்வந்த
கந்தரக்கவிகைவள்ளல் கமலமென்பதத்தைநாளுஞ்
சிந்தையிலிருத்தி வாழ்த்தும்யூசுபைத்தினமுங்காத்தாள்
அந்தமுமுடிவுமில்லா வாதியேயழிவில்லானே.

மானிலமுழுதுவாழ்த்த் மாதவம்பெருகிவாழ்வோன்
கானின்மான்பிணையாய்மீட்ட கதிபுல்லாதமக்கன்பானோன்
நீணிலதவராசெம்மல் யூசுபைத்தினமுங்காத்தாள்
வானமும் புவிமற்றியாவும் வகுத்தல்லவனீதானே.

வேறு-காதல்.

எப்பொருட்குமப்பொருளா யெவ்வுயிர்க்குமவ்வுயிராய்
மெய்ப்பொருளாயாதியந்த மில்லானே யிப்புவிமேல்
தப்பிதங்களெப்பவும் சாராமல் யூசுபைநீ
யெப்பொழுதுங்காத்தணைத்தா ளென்றுமழிவில்லானே.

அண்டினவர்க்காதார மாயுதவயூசுபெனுங்
கொண்டலைத்தீன்கொண்டமைத்தாள் கோமானே சீமானே
மண்டலத்திலன்னைதன்னை மாதுமக்கள்சம்பத்துடன்
என்றென்றைக்கும்நன்மைசெய்து யீடேறநீதுணைச்செய்.

துனியானவுள்ளபலாய் தோசமுசிபத்துகள்வீண்
அனியாயந்தீங்குபொல்லாங் கானதொன்றுஞ்சாராம
லினிதாயூசுபைநீ யேத்தமுடன்காத்தருள்செய்
தனியேதாமாகியெங்கும் சமதான தானவனே.

வெண்பா.

சொன்னமொழிமாறாச் சுந்தரஞ்சேர்யூசுபுக்குள்
றன்னருளாலீமான் றழைத்தோங்கி—யின்னிலமீ
தில்லையென்போர்க்கில்லை யென்னுதியறகுமானே
செல்விகநல்கிரகுஞ் செய்.

ஆமின் யாறப்பல் ஆலமீன்.

முற்றிற்று.

---

இப்புஸ்தகம் வேண்டியவர்கள் தேவகோட்டை, சிலை. கா. செய்யதுமுகம்மதுராவுத்தர் தோல்கடையில் பெற்றுக்கொள்ளலாம்.